டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 3.11.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 114 | Madurai | Online Edition

இந்தியாவில் நிலக்கரி உற்பத்தி, விநியோகம் கணிசமாக அதிகரித்து சாதனை

சென்னை, நவ.2

நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்க மத்திய நிலக்கரி அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் பயனாக இந்தியாவில் நிலக்கரி உற்பத்தி கணிசமாக அதிகரித்து உள்ளது. சொந்த மற்றும் வணிகரீதியிலான நிலக்கரி சுரகங்க ளில் இருந்து 2026 அக்டோபர் வரை 22.03 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டது. 2025 அக்டோபர் மாதம் 15.49 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், தற்போது இது 42 சதவீதம் அளவுக்கு உயர்ந்து உள்ளது. நிலக்கரி விநியோகம் 2025 அக்டோபரில் 15.48 மில்லியன் டன்னாக இருந்த நிலையில், தற்போது 21.11 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது. நிலக்கரி விநியோக சதவீதம் 36 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலம், லொஹரி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கரி சுரங்கத்திற்கு தற்போது அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது நிலக்கரி உற்பத்திக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளதாக நிலக்கரி துறை அமைச்சகம் தெரிவித்து உள்ளது. தற்போது நாடு முழுவதும் சொந்த மற்றும் வணிக ரீதியிலான சுரங்கங்களின் எண்ணிக்கை 87ஆக அதிகரித்து உள்ளது.

உற்பத்தியை அதிகரித்ததன் காரணமாக, நிலக்கரி இறக்குமதி செய்வது குறையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலக்கரி விநியோகத்தை அதிகரிப்பது, மூலப்பொருட்கள் உற் த்தியை உயர்த்துவது, முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பை மேம்படுத்து வது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய நிலக்கரி அமைச்சம் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் தேசிய அளவில் எரிசக்தி, தொழிற்சாலைகளுக்கான நிலக்கரி தேவையை பூர்த்தி செய்யமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவிகள்!



தஞ்சாவூர், நவ.2 தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில், 30.10.26 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் R.ரவதி, தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்ற வேளாண் மாணவிகள்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் தங்கள் கிராமங்களில் நிலவும் வேளாண் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துரைத்தனர். விவசாயிகளின் கோரிக்கைகளைக் கவனமாகக் கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர், அவற்றிற்குத் தேவையான தீர்வுகளை வழங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். மேலும், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளை ஏற்கனவே நிறைவேற்றியதற்காக விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்தனர்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 'உயிர் நீர் இயக்கம் 2.0' (ஒவ்வொரு துளி நீரையும் சேமிப்போம்) தொடர்பான துண்டுப் பிரசுரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட்டு விவசாயிகளுக்கு வழங்கினார். இதன் மூலம் நீர் சேமிப்பின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

1. டெல்டா மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

2.தஞ்சாவூர் பகுதிகளில் விவசாயத்தின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய ஆழ்துளைக் கிணறு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

3.வயல்களுக்கான வடிகால் வசதிகள் முறையாக இல்லாததால், வடிகால் வாய்க்கால்களைத் தூர்வாரிச் சீரமைக்க வேண்டும்.

இதுபோன்ற பல கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, நாங்கள் விவசாயிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் கிராமங்களில் நிலவும் வேளாண் பிரச்சினைகள், வயல்வெளிகளில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களின் தேவைகள் குறித்து நேரடியாகக் கேட்டறிந்தோம். விவசாயிகள் தெரிவித்த குறைகள் மற்றும் கோரிக்கைகள் அனைத்தையும் எங்கள் குறிப்பேட்டில் பதிவு செய்துகொண்டோம்.

இந்நிகழ்வின் மூலம் விவசாயிகளின் அடிப்படைத் தேவைகள், களநிலைப் பிரச்சினைகள் மற்றும் வேளாண் துறையில் நீர் மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

இயற்கை மற்றும் உயிர்ம வேளாண்மை

விளை பொருட்களான உழவர் சந்தை துவக்கம்

திருப்பூர், நவ.2

திருப்பூர் மாவட்டத்தில் புதிய உதயமாக நம் விவசாய பெருமக்கள் தாங்களாக இயற்கை முறையில் விளைவித்த காய்கறி, பழங்கள் மற்றும் அதன் மதிப்புக்கூட்டப்பட்ட விளைபொருட்களை விற்க, வாங்க ஒரு அரிய வாய்ப்பாக திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து உழவர் சந்தைகளிலும் 01.11.26 ஞாயிற்றுக்கிழமை உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார் துவங்கி வைத்தார்.

● விவசாயிகளுக்கு இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடி விற்பனை மற்றும் அதிக இலாபம்

● இயற்கை விவசாயிகளால் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

● நுகர்வோர்களுக்கு நஞ்சில்லா உணவு, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

● புத்தகம் புதிய இயற்கை வேளாண் விளைப்பொருட்கள் நியாய மான விலையில்

தகவல் : யுவராஜா தட்சிணாமூர்த்தி வேளாண்மை பொறியாளர், உடுமலை.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், நவ.2

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/நபர் (அடையாள சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நாள் மற்றும் நேரம் : 5.11.26 (வியாழக்கிழமை) காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி எண் : 0422 – 6611336, 6611226, 96294 96555, 63792 98064, 93618 89846. மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

'டிரைக்கோகிராமா முட்டை அட்டை' செயல்விளக்க நிகழ்ச்சியில் வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், நவ.2

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பரவாக் கோட்டை கிராமத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில், சுற்றுச் சூழலுக்கு உகந்த உயிரியல் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, பயிர் களைத் தாக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் டிரைக்கோகிராமா முட்டை அட்டையின் நன்மைகள், அது செயல் படும் முறை மற்றும் வயல் களில் பயன்படுத்தும் விதம் குறித்து மாணவர்கள் நேரில் செயல்விளக்கம் அளித்து விளக்கினர்.

இரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை முறையில் பயிர் பாதுகாப்பு செய்வதன் முக்கியத்துவத்தை உணர்த்திய இந்த நிகழ்ச்சிக்கு, அப்பகுதி விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.2 கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 02.11.26 அன்று, முஷ்ணம், காட்டுமன்னார்கோயில் மற்றும் குமாராட்சி வட்டாரத்தில் உள்ள கானூர், கூ.அருண்மொழிதேவன், மற்றும் மதுரசூடாமணி ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் கூ.சு ஜெய்வேலு, கோ.சத்தியநாராயணன் மற்றும் மு.கலைச்செல்வி ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உரபரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார்.உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற் கொள்ளுமாறு வலியுறுத்தினார்.இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், முஷ்ணம், காட்டுமன்னார் கோயில் மற்றும் குமாராட்சி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

விவசாயிகளுக்கு சமச்சீர் உரப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



கடலூர், நவ.2

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் பகுதியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) வேளாண் அறிவியல் மையத்தில் (Krishi Vigyan Kendra), பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி (PM-KISAN Samman Nidhi) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் (Anbil Dharmalingam Agricultural College and Research Institute) வேளாண் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் விவசாயிகளுக்கு சமச்சீர் உரப் பயன்பாட்டின் (Balanced Use of Fertilizers) முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். இதில் பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை சரியான அளவில் வழங்குதல், உரங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் மண் வளத்தைப் பாதுகாத்தல் போன்றவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், IFFCO நிறுவனத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு, நானோ யூரியா (Nano Urea), நானோ டிஏபி (Nano DAP) போன்ற நவீன உரங்களின் பயன்பாடு, அவற்றின் முக்கியத்துவம் மற்றும் விவசாயத்தில் அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு அமர்வுகள் (Sessions) நடைபெற்றன. அவற்றில் மாணவர்கள் பங்கேற்று, உர மேலாண்மை, நவீன உரத் தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயனுள்ள விழிப்புணர்வையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்கியது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

நவீன வேளாண்மையில் நீர்த்தடம்

நீர்த்தடம் (WATER FOOTPRINT)

நீர்த்தடம் என்றால் நீங்கள் நினைப்பது போல் நீர் ஓடும் தடமான ஆறு அருவி போன்றவை இல்லை.

நீர்த்தடம் என்பது மனித செயல்பாடுகளால் நுகரப்படும் நீரின் அளவு மற்றும் பயன்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு திறன் (நேரடி யாக பயன்படுத்தப்படும் நீர் + மறைநீர் பயன்பாடு). நீர்த்தடம் லிட்டரால் அளவீடு செய்யப்படுகிறது.

இதன் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டிற்கும், கண்டத்திற்கும் நீர்த்தடம் எவ்வளவு என கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் நீர்த்தடம்

இந்தியாவின் நீர்த்தடம் 980 cubic meters per year per capita. xU க்யூபிக் மீட்டர் என்பது 1000 லிட்டர் ஆகும். இந்தியாவில் ஒரு வருடத்திற்கு ஒரு தனி நபரால் நுகரப்படும் தண்ணீரின் அளவு 980 க்யூபிக் மீட்டர் ஆகும் அதவது 980000 லிட்டர்.

இது உலக அளவில் சராசரியான நீர் தடத்தின் அளவான 1243 க்யு+பிக் மீட்டரை விட மிகவும் குறைவான ஒன்றாகும். சைனாவின் நீர்த்தடம் 775 cubic meters per year per capita.

ஜப்பானின் நீர்த்தடம் 1100 cubic meters per year per capita.

அமெரிக்காவின் நீர்த்தடம் 2600 cubic meters per year per capita.

சரி, அப்படியானால், இந்தியாவில் நீர்த்தடம் என்பது இந்தியாவிற்கு வெளியில் எவ்வளவு போகிறது?

ஒரு தனி நபரின் நீர்த்தடம் என்பது ஒருவர் வீட்டிலும்,வீட்டின் வெளியிலும் பயன்படுத்தும் தண்ணீர் மற்றும் மறை நீரின் மொத்த அளவு ஆகும்.

நீர்த்தடம் என்பதை மூன்று வகையாக பிரிக்கலாம்.

1. Green water foot print. (பசுமை நீர்த்தடம்)
2. Blue water foot print (நீல நீர்த்தடம்)
3. Grey water foot print. (சாம்பல் நீர்த்தடம்)

பசுமை நீர்த்தடம்

பசுமை நீர்த்தடம் என்பது மழையின் மூலம் பெறப்படும் மழை யின் நீர் வேர் மண்டலத்தில் சேமிக்கப்படும், ஆவியாக்கப்படும்

மற்றும் தாவரங்களால் இணைக்கப்படும். மழையில் நீராகும் இது வேளான் தோட்டக்கலை மற்றும் வனவியல் தயாரிப்புகளுக்கு மிகவும் பொருத்தமானது.

நில நீர்த்தடம்

நில நீர்த்தடம் என்பது மேற்பரப்பு அல்லது நிலத்தடி நீர் வளங் களிலிருந்து பெறப்பட்ட மற்றும் ஆவியாகி ஒரு பொருளில் இணைக்கப்பட்டு அல்லது ஒரு இடத்திலிருந்து இருந்து எடுக்கப்பட்டு இன்னொரு இடத்திற்குத் திரும்பும் அல்லது வேறு நேரத்தில் திரும்பும் நீர் பாசனம் செய்யப்பட்ட விவசாயப் பயிர் தொழில் மூலம் உருவாக்கப்பட்ட பொருள் மற்றும் உன்நாட்டு நீர்ப் பயன்பாடு ஒவ்வொன்றும் நில நீர்த்தடம் வைத்திருக்கலாம்.

சாம்பல் நீர்த்தடம்

சாம்பல் நீர்த்தடம் என்பது குறிப்பிட்ட நீர்த் தரத்தைப் பூர்த்தி செய்ய மாக படுத்திகளை ஒருங்கிணைக்கத் தேவையான புதிய நீரின் அளவு சாம்பல் நீர்த்தடம் ஒரு நன்னீர் வனத்திற்கு நேரடியாக ஒரு குழாய் வழியாக அல்லது மறைமுகமாக ஓடு அல்லது மண், ஊடுருவக்கூடிய மேற்பரப்புகள் அல்லது பிற பரவலான மூலங் களிலிருந்து வெளியேற்றப் படுவதைக் கருதுகிறது.

ஒரு கிலோ மாட்டுக் கறி தயாரிக்க 15000 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இதில் 93% பசுமை நீர்த்தடம், 4% நீல நீர்த்தடம், 3% சாம்பல் நீர்த்தடம் ஆகும். இப்படி ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு நீர்த்தடம் இருக்கும். இப்படி ஒவ்வொரு பொருளுக்கும் இந்த பூமி அனைத்து உயிர்களுக்கும் ஆனது. ஆனால் மனிதர் களுக்கு மட்டுமானதாக நாம் நினைத்துக் கொள்கிறோம். அதனால் தான் நம்மால் உற்பத்தி செய்ய முடியாத தண்ணீரை விற்பனை செய்வதற்கு உரிமையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி தண்ணீரை விற்பதற்கு எங்கிருந்து உரிமை வந்தது மினரல் வாட்டர் என்று சொல்லப்படக்கூடிய அக்வாஃபினா, bisieri போன்ற தண்ணீரை பாட்டிலில் அடைப்பதற்கு ஏதுவாக ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் டீ மினரனைசேசன் போன்றவை செய்து புட்டியில் அடைக்க ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஏழு லிட்டர் தண்ணீர் செலவாகிறது. செருப்பு செய்வதற்கான இயந்திரங்களை இத்தாலி நமக்கு ஏற்றுமதி செய்கிறது. இத்தாலி என் செருப்புகளை தயார் செய்யவில்லை என்பது இந்தியாவில் யாருடைய கவனத்திற்கும் வரவில்லை.

இந்தியாவில் முன்னேற்றம் என்ற பெயரில் செருப்புத் தயாரிப்பு, கார் தயாரிப்பு, பின்னலாடை தயாரிப்பு போன்றவைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். இதன் மூலமாக ஒரு நாளைக்கு எத்தளை கோடி லிட்டர் தண்ணீரை ஏற்றுமதி செய்கிறோம் என்பது

தெரியாமல் இருக்கிறது. தண்ணீர் உள்ள காலத்தில் இதுபோன்ற மறைநீர் சேமிப்பு அத்தியாவசியமாகிறது.

மறைநீரை எப்படி சேமிப்பது? தண்ணீர் அதிகமாக உள்ள காலத்தில் விவசாயம் மூலம் உணவு உற்பத்தியை பெருக்கிக் கொள்வதும் தண்ணீர் இல்லாத காலங்களில் உற்பத்தி செய்த உணவுப் பொருட்களை மக்களுக்கு அளிப்பதன் மூலமும் மறைநீர் சேமிக்கப்படுகிறது.

இந்த உண்மையை அறியாமல் உணவு ஏற்றுமதிக் கொள்கையில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. உலகளாவிய ஆராய்ச்சிகளில் விஞ்ஞானிகள் கூறுவது, இந்தியா உணவு ஏற்றுமதி செய்வது குறித்து சிந்திக்க வேண்டும் என்பதாகும். ஏற்றுமதியின் மூலம் மறைநீர் மட்டுமன்றி விளைநிலப் பயன்பாடும் அதிகமாகிறது.

பண்டைய காலத்தில் பண்டமாற்று முறை அடிப்படையில் நமது முன்னோர்கள் பொருட்களை மட்டுமே மாற்றிக் கொண்டனர். அதாவது உப்பு விளையும் பகுதியில் இருப்பவர்கள் உப்பைக் கொடுத்துவிட்டு மாறாக நெல்லை வாங்கி சென்றார்கள் அல்லது கடல்வாழ் உயிரினங்களான மீன் போன்றவைகளை கொடுத்து விட்டு விளை பொருட்களான கரும்பு, மஞ்சள் போன்றவற்றை வாங்கிக் கொண்டனர். இதன் மூலம் மறைநீரை மாற்றிக் கொண்டார்கள். இதனால் ஒரு பகுதியில் இருப்பவருக்கும் இன்னொரு பகுதியில் இருப்பவருக்கும் தேவையான பொருட்கள் கிடைப்பதோடு தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருந்தது. மாறாக தற்போது பொருட்களை ஏற்றுமதி செய்து விட்டு பணத்தைப் பெற்றுக் கொள்கிறோம். ஆனால் அந்தப் பணத்தினால் தண்ணீரை உருவாக்க முடியாது என்பது நிதர்சனமான உண்மை.

தகவல் ; ***T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.***

கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்ற வேளாண் மாணவர்கள்!



சேலம், நவ.2

சேலம் மாவட்டம், சந்தியூர் கிராமத்தில் 01.11.26 அன்று நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், வாழவச்சனூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த 25 வேளாண்

மாணவர்கள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கிராம மக்களுடன் இணைந்து கிராமத்தின் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள் மற்றும் கிராம வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இக்கிராம சபைக் கூட்டத்தின் மூலம் மாணவர்கள் கிராம மக்களின் தேவைகள், உள்ளூர் பிரச்சினைகள், அரசுத் திட்டங்கள் மற்றும் ஊரக வளர்ச்சியில் பொதுமக்களின் பங்களிப்பு குறித்து நடைமுறை அறிவைப் பெற்றனர். மேலும், கிராம மக்களிடையே பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.



சூரிய காந்தி சாகுபடிக்கான தொழில்நுட்பங்கள்



தென்மாவட்டங்களில் அதுவும் கரிசல் நிலங்களில் விவசாயி களின் கடைசி மானாவாரி விதைப்பாக சூரிய காந்தி சாகுபடி செய்கின்றனர். குறைந்த செலவில் நிறைந்த வருமானம் தரக்கூடிய பயிர் தான் சூரிய காந்தி (SUNFLOWER). இந்த பயிரில் கொழுப்பின் அளவு குறைவாக இருப்பதாலும் லினோலிக் அமிலம் 64% அதிகமாக உள்ளதால் இதய நோயாளிக்கு ஏற்ற சமையல் எண்ணெயாகும்.

சாகுபடிக்கான தொழில்நுட்பங்கள்

விதைத்தேர்வு

கே.பி.எஸ்.எச் 1, டி.ஆர் எஸ் எச் 1, TNAU HYBRID, SUN RISE

பருவம்

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மானாவாரியாகவும் விதைக் கப்படுகிறது.

விதை அளவு

5 முதல் 8 கிலோ வரை தேவைப்படும்.

நிலத் தயாரிப்பு

நிலத்தை நன்றாக 3/4 உழவு போட வேண்டும். ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரமிட வேண்டும். நிலத்தின் தன்மைகேற்ப பாத்தி,பார் வாய்க்கால் அமைத்து, வடிகால் வசதி ஏற்படுத்திட வேண்டும்

விதை நேர்த்தி

விதை மூலமாக பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டி.விரிடி கலந்து விதை நேர்த்தி செய்-யலாம். ஆரம்ப வளர்ச்சி ஊக்குவிக்க விதையுடன் உயிர் உர நேர்த்தி (BIO FERTILIZERS) செய்யலாம்.

இடைவெளி

வீரிய ஒட்டு ரகங்கள் 60X30செ.மீ இடைவெளி விட வேண்டும். விதைகளை 3 செ.மீ ஆழத்தில் விதைக்க வேண்டும்.

உர மேலாண்மை

மண் பரிசோதனை முடிவிற்கு ஏற்ப உரமிட வேண்டும். பொது பரிந்துரையாக ஏக்கருக்கு யூரியா 53 கிலோ சூப்பர் பாஸ்பேட் 228 கிலோ, பொட்டாஷ் 40 கிலோ மண்ணில் ஈரம் இருக்கும் போது இடவும். சூரிய காந்தியில் எண்ணெய் உற்பத்தி மற்றும் பயிரின் சீரான வளர்ச்சிக்கு கந்தகம் (SULPHUR) தேவைபடுகிறது. அதற்காக ஜிப்சம், இடலாம்.

முக்கிய வளர்ச்சி நிலைகள்

மொட்டு உருவாகும் நிலை, பூக்கும் நிலை, விதை நிரப்பும் நிலை

களை நிர்வாகம்

விதைத்த 15, 30வது நாளில் களை கொத்தியால் கொத்தி களை எடுக்க வேண்டும்.

விதை உருவாகுவதை மேம்படுத்தும் முறைகள்

பூத்தலை முழுமையாக விரியும் காலை 9 மணி முதல் 11.30 மணி வரை மென்மையான முறையில் கையால் மகரந்த சேர்க்கை மேற்கொண்டால் விதைப் பிடிப்பை, மேம்படுத்தலாம். மேலும் ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் போராக்ஸ் கலந்து தெளித்தால், சூரிய காந்தியில் திரட்சியான விதைகளுடன் நல்ல தரமான மகசூல் பெறலாம்.

அறுவடை

சூரியகாந்தி பூவின் பின்புறம் மஞ்சள் நிறமாக மாறும். விதைகள் கடினமாகி கருப்பு நிறமாக மாறும். பூக்களை மட்டும் அறுவடை செய்து காயவைத்து விதைகளை 89% ஈரப்பத்தில் சேமிக்க வேண்டும்.

கிளிகள் பறவைகள் விரட்டும்

விதை உருவான உடனே கொத்தி உண்ண கிளிகள், பறவைகள் கூட்டமாக கூட்டமாக வரும். அவற்றை தடுக்க ஒலி எழுப்ப வேண்டும். வயலின் நடுவே குறுக்கு நெடுக்குமாக கலர்கலரான ரிப்பன்களை கட்டவேண்டும்.

என்ன சூரிய காந்தி விதைக்க தயாரா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

நெல் சாகுபடியில், ஈரப்பதம் மற்றும் உலர்வு முறையைப் பின்பற்றுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, நவ.2

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு துணைப்பிரிவாக, நெல் சாகுபடியில் மாற்று ஈரப்பதம் மற்றும் உலர்வு (Alternate Wetting and Drying – AWD) முறையைப் பின்பற்றுவது குறித்து வேளாண் மாணவிகள் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், நெல் வயலில் தொடர்ந்து நீர் தேங்க வைக்காமல், குறிப்பிட்ட இடைவெளியில் நீர் பாய்ச்சி பின்னர் வயலை உலர விடும் முறையின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. வயலில் நீர்மட்டத்தைக் கண்காணிக்க குழாய் அமைக்கும் முறை, நீர் பாய்ச்ச வேண்டிய சரியான நேரம் மற்றும் நீர் மேலாண்மை நுட்பங்கள் குறித்தும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

இம்முறையைப் பின்பற்றுவதன் மூலம் பாசன நீரைச் சேமிப்பதுடன், சாகுபடிச் செலவைக் குறைத்து சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் உதவ முடியும் என விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. மேலும், நெல் மகசூல் பாதிக்கப்படாமல் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் வேளாண் மாணவிகளால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

மண்புழு உரம் தயாரிப்பு செயல்முறை விளக்கம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு நிகழ்வு நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

திருவள்ளூர், நவ.2

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டத்திலுள்ள சூரியநகரத்தில் 'விளைநிலம் காப்போம் இயக்கம்' (கேத் பச்சாவ் அபியான் – 2026) திட்டத்தின் கீழ் மண்வள மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அரக்கோணம், வியாசபுரத்தில் அமைந்து உள்ள ஜெயா வேளாண்மைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்ட மாணவிகளான பொற்கனி வ, ரினிஷா பா, ஷ்மிளா தே, சங்கீதா வெ, ரம்யா ர, சுமித்ரா ஜெ, ஸ்ரீமதி ஆ, பிரியா மா ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் முறை மற்றும் விவசாயத்தில் அதன் முக்கியத்துவம் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.



மண்புழு உரம் தயாரிக்கும் செயல்முறை விளக்கம்

மாணவிகள் மட்கக்கூடிய கரிமக்கழிவுகள், பண்ணைக்கழிவுகள் மற்றும் சாணத்தைப் பயன்படுத்தி மண்புழுக்களின் உதவியுடன் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த இயற்கை உரத்தை எவ்வாறு தயாரிப்பது என்பதை விவசாயிகளுக்கு நேரடியாகச் செய்து காண்பித்தனர்.

மூலப்பொருட்கள் : மட்கிய கழிவுகள், காய்ந்த இலைகள், பயிர் எச்சங்கள் மற்றும் மாட்டுச்சாணம் ஆகியவற்றைச் சரியான விகிதத்தில் அடுக்கடுக்காக அமைக்கும் முறை விளக்கப்பட்டது.

செயல்முறை : கரிமக்கழிவுகளில் ஈரப்பதத்தைச் சீராகப் பரா மரித்து, மண்புழுக்களை உட்செலுத்தி, குறிப்பிட்ட நாட்களில் அவை

கழிவுகளைச் சாப்பிட்டு ஊட்டச்சத்து மிகுந்த மண்புழு உரங்களாக (Vermicompost) மாற்றும் தொழில்நுட்பம் குறித்துத் தெளிவாக விவரித்தனர்.

விவசாயத்தில் மண்புழு உரத்தின் முக்கியத்துவம்

மண்புழு உரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயத்திற்கு ஏற்படும் நன்மைகள் குறித்து மாணவிகள் விரிவாக எடுத்துரைத் தனர்.

மண் கட்டமைப்பு மேம்பாடு : மண்புழு உரம் மண்ணின் இயற்பியல் தன்மையைச் சீரமைத்து, மண்ணை இறுகவிடாமல் பொலபொலப்பாக வைத்திருக்க உதவுகிறது.

நீர்பிடிப்புத்திறன் அதிகரிப்பு : மண்ணின் நீர்பிடிப்புத் திறனை அதிகரித்து, வறட்சி காலங்களிலும் பயிர்களுக்குத் தேவையான ஈரப்பதத்தைத் தக்க வைக்க துணைபுரிகிறது.

செறிந்த ஊட்டச்சத்துக்கள் : பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து (Nitrogen), மணிச்சத்து (Phosphorus), சாம்பல்ச்சத்து (Potassium) மற்றும் பிற நுண்ணூட்டச் சத்துக்கள் தாவரங்கள் எளிதில் கிரகிக்கக்கூடிய வடிவில் கிடைக்கின்றன.

நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் : மண்ணில் இயற்கை நுண்ணுயிர்களின் செயல்பாட்டை அதிகரித்து, மண்வளத்தை நீண்டகாலத்திற்குப் பாதுகாக்கிறது.

வேர் வளர்ச்சி மற்றும் மகசூல் : பயிர்களின் வேர் அமைப்பை வலுப்படுத்தி, நோய் எதிர்ப்புத் திறனை அதிகரித்து, தரமான கூடுதல் மகசூலைப் பெற வழி வகுக்கிறது.

இந்நிகழ்ச்சி வேளாண் அறிவியல் நிலையத்தின் விஞ்ஞானிகள் முனைவர் செ.சுதா ஷா மற்றும் முனைவர் க.சிவகாமி ஆகியோர் தலைமையிலும், வேளாண்மைத் துறை (Department of Agriculture) அலுவலர்களின் ஏற்பாட்டிலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



இருப்பாளி கிராமத்தில் வேளாண் விழிப்புணர்வு நிகழ்ச்சி!



சேலம், நவ.2

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்தைச் சேர்ந்த இருப்பாளி கிராமத்தில் வேளாண்மைத் துறை – அட்மா திட்டத்தின் கீழ் வேளாண் விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் துணை வேளாண்மை அலுவலர் குப்பண்ணன் தலைமை தாங்கினார். தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக இந்நிகழ்ச்சியை ஒருங்கி ணைத்து சிறப்பாக நடத்தினர். சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

நவீனத் தொழில்நுட்பச் செயல்விளக்கங்கள் : மாணவர்கள் மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் இணைந்து விவசாயிகளுக்குப் பல்வேறு நவீன வேளாண் தொழில் நுட்பங்களை நேரில் செய்து காண்பித்தனர்.

பெரோமோன் பொறி : பயிர்களைச் சூறையாடும் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கும் நவீனக் கருவியின் செயல்பாடுகள் மற்றும் அதைப் பயன்படுத்தும் முறைகள் விளக்கப்பட்டன.

பருத்திப் பயிர் பாதுகாப்பு : பருத்திப் பயிரைத் தாக்கும் பூச்சிகளைத் தொடக்க நிலையிலேயே கண்டறியும் முறைகளும், இயற்கை மற்றும் இரசாயனக் கட்டுப்பாட்டு வழிமுறைகளும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டன.

ஒட்டும் திரவத்தின் நன்மைகள் : பயிர் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கும்போது, அவை இலையில் நன்கு ஒட்டி வீரியத்துடன் செயல்பட உதவும் ஒட்டும் திரவத்தின் நன்மைகள் குறித்து விவரிக்கப்பட்டது.

கிசான் கோஷ்டி (விவசாயிகள் கலந்துரையாடல்) : இதில் பங்கேற்ற விவசாயிகள் தங்களது பயிர்களில் ஏற்படும் பூச்சித்

தாக்குதல், நோய் மேலாண்மை மற்றும் உரப் பயன்பாடு குறித்த பல்வேறு சந்தேகங்களைக் கேட்டறிந்தனர். வேளாண்மைத் துறை அதிகாரிகளும் மாணவர்களும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் விளக்கமளித்து, உரிய தீர்வுகளை வழங்கினர்.

எடப்பாடி வட்டார விவசாயிகள் நவீன பூச்சி மேலாண்மை முறைகளை அறிந்து கொள்ளவும், பயிர் பாதுகாப்புத் தொழில் நுட்பங்களைத் தங்களது விவசாய நிலங்களில் திறம்படப் பயன்படுத்தவும் இந்நிகழ்ச்சி பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.



மக்காச்சோள விவசாயிகளுக்கு மானியம் பெற அதிகாரி அழைப்பு

கோயம்புத்தூர், நவ.2

கோயம்புத்தூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, கோயம் புத்தூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை சார்பில், தேசிய வளர்ச்சி வேளாண் திட்டம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ், மக்காச் சோளம் செயல்விளக்க திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.11,500 மதிப்புள்ள வேளாண் இடுபொருட்கள் அடங்கிய தொகுப்பு மானிய விலையில் வழங்கப்படுகிறது. இடுபொருள் தொகுப்பில் வீரிய மக்காச்சோள விதைகள், உயிர் உரங்கள், டி.என்.ஏ.யூ. மக்காச் சோள பயிர் வளர்ச்சி ஊக்கி, உயிர் கட்டுப்பாடு காரணிகள் மற்றும் மண் வள பரிசோதனைகளை உள்ளடக்கி உள்ளது. மேலும், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் மற்றொரு இனமாக, வீரிய ஒட்டுரக விதைகள் DHM 206 வழங்க கிலோவிற்கு ரூ.100 மானியமாக வழங்கப்படும்.

எனவே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆர்வமுள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பயன் பெற உழவர் செயலியிலோ அல்லது அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அணுகி, இடு பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுரைகளை பெற்று பயனடைய வேண்டும். மேலும் திட்டம் தொடர்பான விபரங்களுக்கு, அந்தந்த வட்டார வேளாண்மை அலுவலர் மற்றும் துணை வேளாண்மை அலுவலரை தொடர்பு கொள்ளலாம் என கோயம் புத்தூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், மீ.தமிழ்ச் செல்வி தெரிவித்துள்ளார்.

ஏற்காடு அரசு தொடக்கப்பள்ளியில் மாணவர்களுடன் இணைந்து மரக்கன்றுகள் மற்றும் மலர்ச்செடி நடும் நிகழ்வில் வேளாண் கல்லூரி மாணவர்கள்



சேலம், நவ.2

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரத்தில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த ராவே (RAWE) மாணவர்கள் பள்ளி மாணவர்களுடன் இணைந்து மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை நடத்தினர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமையை மேம்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ராவே மாணவர்களும் பள்ளி மாணவர்களும் இணைந்து மரக்கன்றுகளை நட்டனர். மேலும், மரங்களை வளர்ப்பதன் அவசியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி பள்ளி மாணவர்களிடையே மரம் வளர்ப்பதன் மீதான ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வையும் மேம்படுத்தும் வகையில் அமைந்தது.

உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம்



திருச்சி, நவ.2

திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகளான மா.ஹரிணி, அ.பராசக்தி, மு.பிரியதர்ஷினி, சே.பிரியதர்ஷினி, நா.ஸ்ரீவித்யா, பா.சுபர்ணா, ஹ.தஸ்லீமா நஸ்ரின், ச.வைஷ்ணவி, நா.ச.விவிதா ஸ்ரீ மற்றும் ச.ஞா.யுவஸ்ரீ ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் துறையூர் வட்டாரத்தில் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக, சிக்கத்தம்பூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் பயன்பாடு குறித்து செயல்விளக்கம் அளித்தனர். டிரைக்கோடெர்மா, சூடோமோனாஸ் மற்றும் பேஸில்லஸ் துரிஞ்சின்சிஸ் (Bt) போன்ற உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் முக்கியத்துவம், அவற்றின் பயன்பாடுகள் மற்றும் பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதில் அவற்றின் பங்கு குறித்து மாணவிகள் விளக்கினர்.

மேலும், இரசாயனப் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பயிர்களைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் எடுத்துரைத்தனர். இதன் மூலம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி நிலையான வேளாண்மையை மேற்கொள்வது குறித்து விவசாயி களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

வேளாண் கல்லூரி மாணவர்களின் பங்கேற்புடன் கிராமப்புற மதிப்பீட்டுத் திட்டம்



சேலம், நவ.2

பெரம்பலூர், தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டத்திற் குட்பட்ட சோமம்பட்டி கிராமத்தில் கிராமப்புற மதிப்பீட்டுத் திட்டத்தை நடத்தினர்.

இத்திட்டத்தில் கிராம மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, தங்கள் கிராமத்தின் தற்போதைய நிலை, வளங்கள் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர். இதன் ஒரு பகுதியாக, வண்ணக் கோலப்பொடிகளைப் பயன்படுத்தி சமூக வரைபடம் (Social Map), வள வரைபடம் (Resource Map), பட்டை வரைபடம் (Bar Diagram), செல்வநிலை வகைப்பாடு (Wealth Ranking), வென் வரைபடம் (ven Diagram), பயிர் வரிசை வரைபடம் (Crop Pyramid) உள்ளிட்ட 12 வகையான வரைபடங்கள் மற்றும் விளக்கப் படங்கள் உருவாக்கப்பட்டன.

இந்த வரைபடங்கள் மூலம் கிராமத்தின் இயற்கை வளங்கள், விவசாய வளங்கள், மக்களின் பொருளாதார நிலை, பயிர் சாகுபடி முறைகள் மற்றும் கிராமத்தின் அடிப்படை வசதிகள் குறித்து தெளிவாக அறிந்துகொள்ள முடிந்தது. மேலும், கிராமத்தில் உள்ள வேளாண் வளர்ச்சி வாய்ப்புகள், அரசின் வேளாண் நலத்திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய பல்வேறு உதவிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இத்திட்டம் உதவியது.

கிராம மக்களின் நேரடிப் பங்களிப்புடன் நடைபெற்ற இத்திட்டம், அவர்களின் உள்ளூர் அறிவையும் அனுபவங்களையும் வெளிக் கொணர்வதுடன், கிராமத்தின் தேவைகளைக் கண்டறிந்து, எதிர்கால வேளாண் வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகத் திட்டமிடுவதற்கும் பயனுள்ளதாக அமைந்தது.

கிராம மக்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த PRA நிகழ்ச்சி, கிராம வளங்களை அடையாளம் கண்டு, நிலையான வேளாண் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஒரு பயனுள்ள முயற்சியாக அமைந்தது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

தேமோர் கரைசல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், நவ.2

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கீழ்வேளூர், நாகப்பட்டினம் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கொக்கலாடி கிராமத்தில் விவசாயிகளுக்கு தேமோர் கரைசல் தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கமளித்தனர்.

இந்நிகழ்ச்சியில், தேமோர் கரைசல் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள், தயாரிக்கும் முறை மற்றும் பயிர்களில் பயன் படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக் கப்பட்டது. தேங்காய் மற்றும் புளித்த மோர் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் இக்கரைசல், இயற்கை வேளாண்மையில் பயன்படுத்தப்படும் பாரம்பரிய இடுபொருளாகும்.

மேலும், தேமோர் கரைசலைப் பயன்படுத்துவதன் நோக்கம், பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் அதன் சாத்தியமான பங்கு மற்றும் இயற்கை வேளாண் முறைகளில் அதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. விவசாயிகள் தங்களது வயல் களில் எளிய முறையில் இயற்கை இடுபொருட்களைத் தயாரித்துப் பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளுக்கு தேமோர் கரைசல் பற்றிய தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்டதுடன், இயற்கை வேளாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது.



தென்னை டானிக் செயல்விளக்கப் பயிற்சி அளித்த RAWE மாணவிகள்

திருவாரூர், நவ.2



திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டத்திற்குட்பட்ட சித்தமல்லி கிராமத்தில் தென்னை சாகுபடியில் தென்னை டானிக்கின் பயன்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயி களுக்கு செயல்விளக்கப் பயிற்சி (Demon stration) அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் RAWE மாணவி ஜெ.சந்தியா, தென்னை டானிக்கின் பயன்பாடுகள், அதன் நன்மைகள் மற்றும் தென்னை மரங்களின் வளர்ச்சியில் அதன் பங்கு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மேலும், தென்னை மரங்களின் ஊட்டச்சத்து மேலாண்மையில் தென்னை டானிக்கின் முக்கியத்துவம் மற்றும் அதனைப் பரிந்துரைக்கப்பட்ட முறையில் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். இச்செயல்விளக்க நிகழ்வில் RAWE மாணவிகள் கலந்து கொண்டு, தென்னை சாகுபடியில் பின்பற்றப்படும் தொழில் நுட்ப முறைகள் மற்றும் விவசாயிகளுக்கு வேளாண் தொழில் நுட்பங்களைச் செயல்விளக்கத்தின் மூலம் எடுத்துரைக்கும் நடை முறைகள் குறித்து அறிந்து கொண்டனர். இந்நிகழ்வு விவசாயி களிடையே தென்னை டானிக் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அறிவியல் சார்ந்த தென்னை சாகுபடி முறைகளை ஊக்குவிக்கும் நோக்கில் அமைந்தது.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வேளாண் மாணவர்களின் செய்முறை விளக்கம்!

திருவாரூர், நவ.2



திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரம், அகரவேல்குடி கிராமத்தில் கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர் களின் RAWE பயிற்சித் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்காக ஒரு சிறப்பு விழிப்புணர்வு மற்றும் செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், செழிப்பான பயிர் வளர்ச்சிக்கான பனம்பழக் கரைசல், தாவரங்களுக்கு ஊட்ட மளிக்கும் முட்டை அமிலம் மற்றும் அனைத்துப் பயிர்களுக்கும்

ஏற்ற பஞ்சகவ்யா தயாரிக்கும் முறைகளை மாணவர்கள் விவசாயிகளுக்கு நேரில் செய்து காட்டினர். மேலும், விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருட்களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக ஆன்லைன் மூலமாகவே நல்ல விலைக்கு விற்க வழிவகை செய்யும் ஈ–நாம் (e-NAM) தேசிய மின்னணு சந்தை பயன்பாடு குறித்தும் விளக்கமளித்தனர். குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்ட உதவும் இந்த நவீன மற்றும் இயற்கை தொழில்நுட்பக் கருத்துக்களைக் கற்றுக்கொடுத்த மாணவர்களின் முயற்சிக்கு அப்பகுதி விவசாயிகள் தங்களது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.



வேப்பங்கொட்டை கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடுகளை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்



திருவாரூர், நவ.2

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், மேலவாசல் கிராமத்தில் கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் வேளாண் மாணவிகள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் கிராம விவசாயிகளுக்கு வேப்பங்கொட்டை கரைசல் (Neem Seed Kernel Extract – NSKE) தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் வேப்பங்கொட்டைகளைச் சேகரித்து, அவற்றின் வெளிப்புற ஓடுகளை நீக்கி, உட்புறக் கருவை நன்கு பொடியாக்கி, தண்ணீரில் ஊறவைத்து வடிகட்டி கரைசல் தயாரிக்கும் முறையை விளக்கி, நேரடியாகச் செய்து காண்பித்தனர். மேலும், வேப்பங் கொட்டை கரைசலை எவ்வாறு தயாரிப்பது, பயிர்களில் எந்த அளவில் மற்றும் எப்போது தெளிக்க வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தனர். இக்கரைசல் பயிர்களைத் தாக்கும் பல்வேறு பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது என்றும், குறிப்பாக அசுவினி, வெள்ளை ஈ, இலைப்பேன் மற்றும் இளம் புழுக்களின் தாக்கத்தைக் குறைக்க உதவுகிறது என்றும் விளக்கினர். மேலும், வேப்பங் கொட்டை கரைசலில் உள்ள இயற்கையான பூச்சி விரட்டும் மற்றும் உணவூட்டத் தடுக்கும் பண்புகள் பூச்சிகளின் வளர்ச்சி மற்றும் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த உதவுகின்றன என்பதை விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர். ரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன் பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை முறையில் பூச்சிகளை மேலாண்மை செய்வதன் மூலம் பயிர்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க முடியும் என்று விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



வைனு பாப்பு வானியல் ஆய்வகத்திற்கு வேளாண் கல்லூரி மாணவர்கள் களப்பயணம்



திருப்பத்தூர், நவ.2

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் இறுதி ஆண்டு வேளாண் பட்டப்படிப்பு மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் அருகிலுள்ள காவலூரில் அமைந்துள்ள வைனு பாப்பு வானியல் ஆய்வகத்திற்கு (Vainu Bappu Observatory) கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர்.

இந்தப் பயணத்தின் போது மாணவர்கள் வானியல் ஆய்வகத்தின் செயல்பாடுகள், தொலைநோக்கிகளின் பயன்பாடுகள், விண்வெளி ஆராய்ச்சிகள் மற்றும் கோள்கள், நட்சத்திரங்கள் பற்றிய அறிவியல் தகவல்களை அறிந்து கொண்டனர். மேலும், இந்தியாவின் வானியல் ஆராய்ச்சியில் இவ்வாய்வகம் ஆற்றும் முக்கியப் பங்கு குறித்தும், வானியல் தொழில்நுட்ப வளர்ச்சி குறித்தும் விளக்கமாகத் தெரிந்து கொண்டனர்.

இக்கல்விச் சுற்றுலா மாணவர்களின் அறிவியல் சிந்தனை, ஆராய்ச்சி ஆர்வம் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த புரிதலை மேம்படுத்தும் வகையில் அமைந்தது.

உழவர் சந்தை செயல்பாடுகளை அறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருவாரூர், நவ.2

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், மூங்கில்குடி கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின், ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத்குமார் ஆகியோர் உழவர்சந்தையின் செயல்பாடுகளை சந்தையின் நிர்வாக அலுவலர் குணசேகரனிடம் கேட்டறிந்தனர்.



உழவர் சந்தையின் செயல்பாடுகளான, விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் காய்கறிகள் மற்றும் பழங்கள் கொள்முதல் செய்யப்படும் முறைகள், விளைபொருட்களுக்கான விலை நிர்ணயம், சந்தைப்படுத்துதல் மற்றும் நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்யப்படும் நடைமுறைகள் குறித்தும் மாணவர் களுக்கு எடுத்துரைத்தார்.

மேலும், இடைத்தரகர்களின் தலையீடின்றி விவசாயிகளின் விளைபொருட்கள் நேரடியாக விற்பனை செய்யப்படுவதால் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் விளக்கினார். இப்பார்வையின் மூலம் வேளாண் சந்தைப்படுத்துதல் தொடர்பான நடைமுறை அறிவும், உழவர் சந்தையின் முக்கியத்துவத்தையும் மாணவர் களுக்கு அறிவுறித்தனர்.

